1971 ஜூலை 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரம் முடிகின்ற தருவாயில் இருக்கிறது. ஆயினும், கேள்விகள் அதிகமாக இருப்பதால், கேள்வி நேரத்தை இன்னும் கொஞ்சம் நீடித்துக்கொள்கிறேன்.

விவசாயக் கூலி நிர்ணயச் சட்டம்.

* 427 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உணவு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

விவசாயக் கூலிகளுக்கான கூலி நிர்ணயச் சட்டத்தினை மேலும் விஸ்தரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, கணபதியா பிள்ளை குழுவின் அறிக்கையின்படி கீழத் தஞ்சையில் உள்ள விவசாயக் கூலிகளுக்கு குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்திருப்பது போல், தமிழகத்திலுள்ள எல்லா விவசாய தொழிலாளர்களுக்கும் அத்தகைய நியாயமான கூலி கிடைக்க இந்த அரசாங்கம் வேறு ஏதாவது வழி வகை செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மற்றப் பகுதிகளிலே இந்த கூலி நிர்ணயச் சட்டத்தை விஸ்தரிக்கும் எண்ணம் தற்போது இந்த அரசாங்கத்திற்கு இல்லை. இதிலே நிதானமாக யோசித்துப் பார்த்துத்தான் இந்த அரசு ஒரு முடிவு செய்யும்.

திரு. எஸ். கணேசன்: கீழத் தஞ்சை மாவட்டத்திலே ஒரு சில கிராமங்களிலே இருக்கின்ற கட்டுப்பாடுகளின் காரணமாக இந்த குறைந்த பட்ச கூலி நிர்ணய சட்டத்தினபடி விவசாயத் தொழிலாளர்களுக்கு கூலி கொடுக்க மறுக்கிறார்கள். குறைந்த கூலியைக் கொடுத்து வருகிறார்கள். அப்படிப்பட்ட புகார் இந்த அரசுக்கு வந்து, அதன் மீது அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அப்படிப்பட்ட புகார் வந்ததாகத் தகவல் இல்லை. உறுப்பினர் அவர்கள் விசாரித்து குறிப்பிடப் பட்ட கிராமத்தின் பெயரைச் சொன்னால், இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ந. சோமசுந்தரம்: கீழ்த் தஞ்சை மாவட்டத்திலே விவசாய கூலிகளுக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்ற விவசாயக் கூலி அளவை, குறைந்தபட்சம் மேல் தஞ்சை மாவட்டத்திற்காவது விஸ்தரிக்கபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இப்பொழுது இருப்பதற்கு மேல், வேறு எங்கேயும் விஸ்தரிக்க யோசனை இல்லை. ஆனால், மற்ற பகுதிகளுக்கும் இந்தக் கூலி நிர்ணயச் சட்டத்தை விஸ்தரிக்க வேண்டுமென்று கோரிக்கைகள் வந்திருக்கிறது. அதைப் பற்றி இந்த அரசாங்கம் ஆலோசித்துக்கொண்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: இந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு நம் மாநிலத்திலே என்ன தினசரி கூலி கிடைக்கிறது என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்கும், இதற்கும் சம்மந்தமில்லை; எனவே அனுமதி மறுக்கப்படுகிறது.

மாயூரம் நகரிலுள்ள காவிரியாற்றுப் பாலம்

* 428 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா—

மாயூரம் நகரிலுள்ள காவிரியாற்றின் பழைய பாலத்தை அகலப் படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை.

திரு. என். கிட்டப்பா: அந்த பாலம் மிகவும் குறுகலாகவும், பழுது அடைந்திருப்பதாலும், மாயூரம் நகரிலுள்ள காவிரியாற்றின் பழைய பாலத்தை அகலபடுத்த ஏதாவது நடவடிக்கை எடுத்திருக் கிறுர்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாயூரம் நகரிலுள்ள காவிரியாற்றின் பழைய பாலம் மாயூரம் நகராட்சி எல்லைக்குள்ளே இருக்கிறது. எனவே, இதை அகலப்படுத்த வேண்டு மென்றுல், அந்த நகராட்சி செலவிலே ஒரு பங்கை ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படி அந்த மாயூரம் நகராட்சி தன்னுடைய பங்கை ஏற்றுக்கொள்ள இசைவு தெரிவித்தால், அதன் மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு யோசனை செய்யும்.

பு. முட்டலூர் அருகே வெள்ளாற்றின் குறுக்கே பாலம்

* 429 வினு—திரு. என் கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா—

தென்னுற்காடு மாவட்டம், பு. முட்டலூர் அருகே வெள்ளாற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, அந்த இடத்திலே பாலம் கட்டப்படவிருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த நல்ல காரியத்தை எப்பொழுது செயல்படுத்தப்படும் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்த பாலம் கட்டுவதற்கு 25 லட்சம் ரூபாய் செலவாகும் என்று தெரிகிறது. இதிலே மத்திய அரசாங்கத்தின் அனுமதியையும் பெறவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, மத்திய அரசாங்கத்தினுடைய உதவியையும், அனுமதியையும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.